சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.133/2022

25.08.2025

பி.வா.சா.1 திரு.சம்பத்குமார், த/பெ. ராமலிங்கம்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் லெட்சுமிநாராயண கூட்டுறவு வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 காசோலை என் கணக்கிற்குண்டான கசோலை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்பதை காட்டும் வயில் வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராதை படித்துபார்த்துள்ளேன். பிராதில் வா.சா.ஆ.1 காசோலை முதல்முறை பணமாக்க அனுப்பப்பட்டதில் அதிலுள்ள கையெழுத்து மாறுபட்டிருப்பதாக திருப்பப்பட்டது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை திருப்பப்பட்ட பின்னர் வாதி என்னிடம் விவரம் தெரிவித்ததில் நான் மீண்டும் காசோலையை வங்கியில் செலுத்துமாறும் பெற்றுக்கொள்வதாக சொன்னேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதி இரண்டாவது முறையாக காசோலையை வங்கியில் செலுத்த வங்கியில் போதிய பணமில்லை என திருப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றால் இரண்டாவது முறை வா.சா.ஆ.1 ஆவணத்தை வங்கியில் செலுத்திய போதும் கையெழுத்து மாறுபட்டிருப்பதாக திருப்பப்பட்டிருக்கும் என்றும் ஆனால் அவ்வாறு குறிப்பிடாமல் போதிய பணமில்லை என்று மட்டுமே திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துபார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் தாவா காசோலையை எனது மனைவி வாதியிடம் ஏலச்சீட்டு கலந்துக்கொள்வதற்காக பொறுப்புறுதியாக கொடுத்துள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். வாதி ராமு எனக்கு பழக்கமில்லை. வாதி ராமு என்ன தொழில் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு போட்ட பிறகு வாதியை

பற்றி விசாரித்து தெரிந்துகொண்டேன். வாதிக்கு வேளாங்கண்ணியில் லாட்ஜ் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டாவது வாதி மீது நான் குற்ற நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை, எனது மனைவி புகார் கொடுத்தார். எனது மனைவி கொடுத்த புகாரின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது மனைவி வாதி மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதியிடம் 26.09.2021ல் ரூ.10,00,000/-த்தை கடனாக பெற்றுக்கொண்டு அதற்காக தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால்தான் எதிர்வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் காசோலையில் உள்ள கையெழுத்தை மறுக்கவில்லை என்றால் சரியல்ல. ராமு எந்தக்காலத்திலும் ஏலச்சீட்டு நடத்தவில்லை என்றாலும் வாதி வேளாங்கண்ணியில் லாட்ஜ் வைத்து நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. ஏலச்சீட்டை ராமுவின் மகள் சரண்யா நடத்தினார். வாதியின் மகளுக்கு திருமணமாகி கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றாலும் நான் சொல்வது போல் சரண்யா ஏலச்சீட்டு எதுவும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. நான் வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு காசோலையை கொடுத்துவிட்டு ற்போது பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தொகையை கொடுக்க மறுத்து ஆதாரமற்று சங்கதிகளை வைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தாவாபடி வாதிக்கு தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.